**TAMIL MURASU, THURSDAY, 2 SEPTEMBER 2021, PAGE 4**

# தாடை முறிந்ததால் மருத்துவம் படிக்க முடிவு செய்த மாணவி

லோ பெய் யீக்கு 17 வயதாக இருந்தபோது, பள்ளியில் விழுந்து அவரது தாடை முறிந்தது, பற்கள் உதடுகளைக் கிழித்துவிட்டன. தமது ஒன்பது மாத சிகிச்சையின்போது மருத்துவர்கள் அளித்த தெளிவான விளக்கங்கள் அவரை ஈர்த்தன. அதுவரை பொறியியலை நோக்கிச் சென்றவர், மருத்துவத் துறை பக்கம் திரும்பினார். மருத்துவத் துறையில் சேர்வதற்காக பல பிரசித்தி பெற்ற பல்கலைக்கழகங்களையும் பொறியியல் உபகாரச் சம்பளங்களையும் அவர் நிராகரித்தார்.

நன்யாங் பல்கலைக்கழகத்தின் லீ கொங் சியன் மருத்துவப் பள்ளியில் மருத்துவத் துறையில் சேர்ந்துள்ள 168 மாணவர்களில் குமாரி லோவும் ஒருவர்.